செய்தி வெளியீடு எண்.856 நாள்.18.11.2009

# கோயம்பேடு வைகுண்டவாசப் பெருமாள் கோயில் மஹா சம்ரோட்சனம் குடமுழுக்கு

## அறநிலையத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் கலந்து கொள்கிறார்.

வரலாற்று சிறப்பு மிக்கதும், மிகவும் பழமை வாய்ந்ததும், புராதான சிறப்புடையதுமான கோயம்பேடு வைகுண்ட வாச பெருமாள் கோவிலில் நவம்பர் 22-ம் தேதி காலை 5.30 மணிக்கு மகா சம்ரோட்சனா குடமுழுக்கு நடைபெறுகிறது.

பெருமை மிகுந்த இக்கோயில் அமைந்துள்ள இடம் முற்காலத்தில் பெரிய அடர்ந்த காடாக இருந்ததில் வால்மிகி முனிவர் ஆஸ்சிரமம் அமைத்து தவம் இருந்தார். இந்த ஆசிரமத்தில் ராமனின் துணைவியார் சீதை தங்கி இலவக்குசலர்களை பெற்றெடுத்ததாகவும், அசுவமேதையாக குதிரையை இலவக்குசலர்கள் கட்டியதால் இராமபிரான் அயோத்தியிலிருந்து இந்த இடத்திற்கு வந்து போர் புரிந்த போது சீதை இலவக்குசலர்களுக்கு தம் தந்தையை காட்டி விளங்கச் செய்து ஒன்றுக்கூடிய இடமாகும். இதனால் இக்கோயிலில் வழிபட்டால் பிரிந்தவர்கள் ஒன்று கூடுவார்கள் என்பதுடன் இக்கோயிலில் உள்ள குசலவ தீர்த்தத்தில் நீராடினால் முற்பிறவி சாபம் நீங்குவதுடன் பித்ரு சாபமும் நீங்கும் என்பதுடன் இக்கோயிலில் உற்சவர் வைகுண்ட வாசப்பெருமாள் ஆக்வாணமுத்திரையுடன் பக்தர்களை அழைத்து அருள்பாலிக்கின்றார் என்ற சிறப்பும் வால்மிகிக்கும், லவக்குசலர்களுக்கும் நினைத்த மாத்திரமே பெருமாள் வந்து நின்றக்கோலத்தில் காட்சியளித்தார் என்பதால் இக்கோயில் நித்தியவைகுண்டவாசம் என சிறப்புடையதாகும்.

பழமையான இக்கோயில் 2000 ஆண்டுகளுக்கு முற்பட்டதும். 1000 ஆண்டுகளுக்கு முன்பு மூன்றாம் குலோத்துங்க சோழ மன்னரால் புதுப்பித்து கட்டியதும், பல்லவர், விஜயநகர பேரரசு மன்னர்களால் மானியம் அளிக்கப்பட்டதுமான கோயிலாகும்.

தமிழக அரசு சட்டமன்றத்தில் 2008-2009 பட்ஜெட் கூட்டத்தொடரில் அறிவிப்பு செய்தவாறு செப்டம்பர் 2008 தேதியில் திருப்பணிகள் திருக்கோயிலில் துவங்கப்பட்டது. நன்கொடையாளர்கள் மூலம் புதிய தாயார் மண்டபம், ஆண்டாள் மண்டபம், கொடி மரத்தின் அருகில் மண்டபம், வாகன பாதுகாப்பு மண்டபம், நூதன ஆஞ்சநேயர் கோயில் விமானம் மற்றும் முகப்பு மண்டபம் கட்டப்பட்டதுடன் மூலவர் விமானம், தாயார் விமானம், ஆண்டாள் விமானம் பழுது பார்த்து பஞ்சவர்ணம் வைத்தல், தசாவதாரம் புதிதாக அமைத்தல் இக்கோயில் வரலாறு சுதைகள் செய்தல், கோயில் முழுவதும் மேல்தளங்கள் பழுது பார்த்தல் போன்று ரூ.50 லட்சம் மதிப்பில் திருப்பணிகள் நன்கொடையாளர்கள் மூலம் செய்யப்பட்டுள்ளது.

தமிழக அரசின் சுற்றுலாத்துறை நிதி உதவி மூலம் கோயில் முன்புறம் ஏழு மீட்டர் நீளமுள்ள ரோடு ரூ.3.40 லட்சத்தில் கான்க்ரீட் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

ரூ.13 லட்சம் மதிப்பில் செப்டம்பர் 20-ம் தேதியில் யாகசாலை பூஜைகள் துவங்கி, செப்டம்பர் 22-ம் தேதி வரை நான்கு கால யாகசாலை பூஜைகளுடன் துவங்கி, செப்டம்பர் 22-ம் தேதி காலை 5.30 மணிக்கு சம்ரோட்சனம் குடமுழுக்கு நடைபெறுகிறது. 25 யாகசாலைகள் அமைக்கப்பட்டு, பிரதான ஆச்சாரியார் விஜயராகவ பட்டாசாரியார்கள் தலைமையில் 60 பட்டாசாரியார்கள் பூஜைகள் செய்கின்றனர். வேதபாராயணம், பிரபந்த பாராயணம் நடைபெறுகிறது.

**அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் பங்கேற்றல்**

விழாவில் செப்டம்பர் 20-ம் தேதி மாலை குடமுழுக்கு முன்னிட்டு துவங்கப்படும் யாகசாலை பூஜையில் அறநிலையத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் கலந்துக் கொள்கிறார். இவ்விழாவில் சென்னை மாநகர மேயர் மா.சுப்பிரமணியம், சட்டமன்ற உறுப்பினர் பா.ரங்கநாதன், பாராளுமன்ற உறுப்பினர் சிட்லபாக்கம் சா.இராஜேந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.அன்பழகன், அறநிலையத்துறை அரசுச் செயலர் கா.முத்துசாமி இ.ஆ.ப. ஆணையர் ப.ரா.சம்பத், இ.ஆ.ப. கூடுதல் ஆணையர் தி.ஜெயராமன், இரா.சுப்பிரமணியம், இணை ஆணையர் சி.ஹரிப்பிரியா, உதவி ஆணையர் சு.இராமு, சென்னை மாநகராட்சி மண்டலக்குழு தலைவர் எஸ்.சுரேஷ்பாபு, கா.தனசேகரன்,மாமன்ற உறுப்பினர் சு.இளங்கோவன் பங்கேற்கின்றனர்.

விழா ஏற்பாடுகளை தக்கார் / துணைஆணையர் ப்பி.வாசுநாதன், கோயில் நிர்வாக அதிகாரி த.மோகனசுந்தரம் செய்துள்ளனர்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9